Vision Initiative

A partnership promoting eye health and vision care

# கண்ணீர் அழுத்த நோய் (Glaucoma)



காலப்போக்கில் கண்-அழுத்த விறைப்பு நோயானது பார்வையை எப்படிப் பாதிக்கும் என்பதற்கான உதாரணத்தை இந்தப் படம் காண்பிக்கிறது.

## கண்ணீர் அழுத்த நோய் என்பது என்ன?

கண்ணின் பின்புறத்திலுள்ள பார்வை நரம்பினை (‘optic nerve’) மெதுவாகப் பாதிக்கும் கண் நோய்களின் சேர்மானமே கண்ணீர்-அழுத்த நோயாகும். கண்ணின் உட்புறத்தில் ஏற்படும் உயர்ந்த அழுத்தத்துடன் இதற்குப் பெரும்பாலும் தொடர்பு இருக்கும், ஆனாலும் சாதாரணமான அழுத்தம் இருக்கும் போதும் இது ஏற்படலாம்.

அவுஸ்திரேலியாவில், கண் தெரியாமைக்கும் பார்வை இழப்பிற்குமான பிரதானமான காரணங்களில் கண்ணீர் அழுத்த நோய் ஒன்றாகும். கண்ணீர் அழுத்த நோய் உள்ள அவுஸ்திரேலியர்களில் பாதி பேருக்குத்தான் இந்த நோய் அவர்களுக்கு இருப்பது தெரியும்.

இதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சையளிப்பது கண்ணீர் அழுத்த நோய் ஏற்படும் பார்வை இழப்பினைத் தடுக்க அல்லது தாமதப்படுத்தக்கூடும்.

## Glaucoma

This image shows and example of how glaucoma may affect vision over time.

## What is glaucoma?

Glaucoma is a group of eye diseases that slowly damage the nerve for vision at the back of the eye (‘optic nerve’). It is often linked to high pressure inside the eye but can also occur with normal pressure.

Glaucoma is one of the leading causes of blindness and vision loss in Australia. Only half of Australians with glaucoma know they have it.

Early detection and treatment can prevent or delay much of the vision loss caused by glaucoma.

Tamil. April 2017. மூலவளங்களை வேண்டிப் பெறலாம்.
விக்டோரிய மாநில அரசாங்கத்தின் ஆதரவிற்கு Vision 2020 Australia ஏற்பு அளிக்கிறது

## அறிகுறிகள் யாவை?

- பார்வை நரம்பிற்குக் கணிசமான சேதாரம் ஏற்படும் வரை கண்ணீர் அழுத்த நோய் பெரும்பாலும் அறிகுறிகள் இருக்காது.
- பக்கப்பார்வை (peripheral (side) vision) இழப்பில் துவங்கி மெதுவாக இது பார்வை இழப்பு வரைக்கும் செல்லக்கூடும். பெரும்பான்மைத் தருணங்களில் கண்ணீர் அழுத்த நோய பெரும்பாலும் படிப்படியாக முற்றும்.
- இரண்டு கண்களிலும் ஏற்படலாம், ஆனால் ஒரு கண் மற்ற கண்ணை விட மோசமாக இருக்கக்கூடும்.
- மிகவும் அரிதாக, வலியோடு கூடிய 'கண்ணீர் அழுத்த நோய' இது திடீரென ஏற்பட்டு பார்வை இழப்பை விரைவில் ஏற்படுத்தும்.

## What are the symptoms?

- Often glaucoma has no symptoms until significant damage has been done to the optic nerve.
- It can lead to vision loss which often starts with the loss of peripheral (side) vision. In most cases this is gradual.
- Can develop in both eyes, but one eye may be worse than the other.
- Very rarely, people may develop a sudden-onset, painful form of glaucoma with rapid loss of vision. This is a medical emergency.

## யாருக்கு ஆபத்து?

- 40 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும். வயது கூடக்கூட ஆபத்து அதிகரிக்கும். 40 வயது ஆனவர்களை விட 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கண்ணீர் அழுத்த நோய் ஏற்படுவதற்கான ஆபத்து மூன்று மடங்கு அதிகம்.
- கண்ணீர் அழுத்த நோய் குடும்ப வரலாறு உள்ளவர்களுக்கு. இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இவர்களுக்கு எட்டு மடங்கு அதிகம்.
- ஆப்பிரிக்க அல்லது ஆசிய மரபைச் சேர்ந்தவர்களுக்கு.
- சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு.
- மிகவும் அதிகமான கிட்டப்பார்வை அல்லது தூரப் பார்வை உள்ளவர்களுக்கு.
- ஏற்கனவே கண்ணில் காயமடைந்தவர்களுக்கு அல்லது கார்ட்டிகோஸ்டிராய்டு (corticosteroid) மருந்துகளை உட்கொண்டு வருவோருக்கு.

## Who is at risk?

- All people aged over 40. The risk increases with age. People aged over 70 are three times more likely to develop glaucoma than those aged 40.
- People with a family history of glaucoma. They are up to eight times more likely to develop the condition.
- People of African or Asian descent.
- People who have diabetes.
- People who are very short- or long-sighted.
- People who have had previous eye injuries or who take corticosteroid medications.

## என்ன செய்யலாம்?

- கண் பரிசோதகர் ஒருவரிடம் (பார்வைச் சோதகர் (optometrist) அல்லது கண் மருத்துவர் (ophthalmologist)) தவறாமல் விழிச் சோதனைகளை மேற்கொள்ளுங்கள். பார்வை நரம்புச் சோதனையையும் கண் அழுத்தச் சோதனையையும் இவை உள்ளடக்கவேண்டும்.
- கண் பார்வையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டால், தாமதிக்காமல் கண் பரிசோதகர் ஒருவரைப் பாருங்கள்.

## What can be done?

- Have regular eye tests with an eye health professional (optometrist or ophthalmologist). These should include a check of the optic nerve and eye pressure.
- Visit an eye health professional without delay if vision changes.

துவக்க நிலையிலேயே கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். அறிகுறிகள் வரும் வரைக்கும் காத்திருக்காதீர்கள், தவறாமல் கண் சோதனைளை மேற்கொள்ளுங்கள்.

கண்-அழுத்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்படும்போது அளிக்கப்படும் சிகிச்சை இந்த நோயின் வேகத்தைக் குறைக்கும் அல்லது அது இன்னும் மோசமாவதைத் தடுக்கும். வாழ்நாள் நெடுகக் கண் பார்வையைப் பராமரித்து வருவது சிகிச்சைகளின் நோக்கமாகும்.

**உங்கள் கண் பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் - பரிசோதனை செய்துகொள்ளுங்கள்**

Early detection is essential. Don’t wait for symptoms, have regular eye tests.

When glaucoma is diagnosed, treatment can usually slow or stop the disease from getting worse. Treatments aim to maintain vision throughout life.

**Save Your Sight - Get Tested**

## மேலதிகத் தகவல்களுக்கு

கண் பரிசோதகர் அல்லது பொது மருத்துவர் (GP) ஒருவரிடம் பேசுங்கள்.

1800 500 880 எனும் இலக்கத்தில் ‘அவுஸ்திரேலிய கண்-அழுத்த நோய் அமைப்பு’(Glaucoma Australia)டன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது www.glaucoma.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

செல்க: www.visioninitiative.org.au

பெரும்பான்மையான பார்வைச் சோதனை சேவைகளுக்கு மெடிகெயர் (Medicare) தள்ளுபடி உண்டு. பார்வைச் சோதனையாளர் ஒருவரைப் பார்க்க பரிந்துரை ஒன்று தேவையில்லை. தேவைப்பட்டால், உங்களது பொது மருத்துவர் (GP) அல்லது பார்வைச் சோதகர், கண் மருத்துவர் ஒருவரைப் பார்க்க உங்களைப் பரிந்துரைக்கலாம்.

பார்வை இழப்பிற்கு ஏற்ற சரிப்படுத்தல்களைச் செய்துகொண்டு, சுதந்திரமாக இருந்து தாம் விரும்பும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட உதவும் சேவைகளும் ஆதரவுதவிகளும் உள்ளன. மேலதிகமாகத் தெரிந்துகொள்ள கண் பரிசோதகர் ஒருவர் அல்லது உங்களது பொது மருத்துவருடன் (GP) பேசுங்கள்.

## For more information

Speak to an eye health professional or GP.

Contact Glaucoma Australia on 1800 500 880 or visit www.glaucoma.org.au

Visit www.visioninitiative.org.au

A Medicare rebate is available for most optometry services. You do not need a referral to see an optometrist. If required, your GP or optometrist can refer you to an ophthalmologist.

There are services and supports to help people adjust to vision loss, remain independent and continue to participate in their chosen activities. Speak to an eye health professional or your GP to find out more.